வைத்து, ஆண்டுக்கு இரண்டு, மூன்று கட்டடங்கள் என்றுதான் கட்ட முடியும். எனவே, joint venture என்ற முறையிலே குறுகிய காலத்தில், ஒரு மூன்றாண்டு காலத்திற்குள் தேவையான அந்த இடத்தில் முழுமையாகக் கட்டிவிடலாம் என்ற முடிவை எடுத்திருக்கிறோம். எனவே, எப்படியிருந்தாலும் அவர்கள் சொன்னது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

194—

இணையவழி விற்பனை

***2755—திருமதி வானதி சீனிவாசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை இணையவழிமூலம் விற்பனை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை ஆன்லைன்மூலம் விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இயங்கும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் தங்கள் இணையதளத்தில் பதிவேற்றுவதற்கு முன்னணி மின்னணு வர்த்தக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த கூட்டு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் 69 தயாரிப்புகள் ஏற்கெனவே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

2022 ஏப்ரல் 28]

மேலும், சில மாவட்டங்களில், மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மின்னணுமூலம் விற்பனை செய்யும்பொருட்டு, அந்தந்த மாவட்டங்களில் இணையதளங்கள் உருவாக்கப்பட்டு, விற்பனை நடைபெற்று வருகிறது.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் தரமுள்ள பொருட்களை விற்பனை செய்ய ஒருமுகப்படுத்தப்பட்ட பிரத்யேக மின்னணு இணையதள முகப்பு உருவாக்க தற்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களின் பயன்பாட்டுக்குத் தேவையான பொருட்களை சுய உதவிக் குழுக்களிடமிருந்து வாங்குவதற்கான வழிமுறையை ஏற்படுத்த, குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் அரசு மின்னணு சந்தைப்படுத்துதல் இணையத்தின் (GeM–Government e–Marketing)மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், சபைக்கும் வணக்கம். மகளிர் சுய உதவிக் குழுக்கள் வறுமையைப் போக்குவதில் மிக முக்கியமான பங்கு வகித்துக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால், பெண்களுடைய வருமானம் முழுக்க, முழுக்க குடும்பத்திற்காக செலவு செய்யப்படுகிறது. குடும்பத்தினர் உடல்நிலை, அவர்களுடைய பாதுகாப்பு, பராமரிப்பு, குழந்தைகளின் கல்வி என, பெண்கள் கையில் கொடுக்கின்ற பணம், முழுமையாகக் குடும்பத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆண்கள் கையில் வருகிற வருமானம்கூட பீடி, சிகரெட், டாஸ்மாக் எனப் போய்விடும். ஆனால், பெண்கள் கையில் கொடுக்கப்படும் பணம் முழுக்க, முழுக்க குடும்பத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். (குறுக்கீடு) அனைவரும் அமைதியாக இருக்கவும். மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். பிறகு கேள்வி கேளுங்கள். மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்கிற பொருட்களை ஆன்லைன்

மூலமாக விற்க முடியுமா; விற்கலாமா என்று கேட்கிறீர்கள். அது தொடர்பாக மட்டும் கேள்வியைக் கேளுங்கள். அதற்கு ஆலோசனை சொல்லுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: நான் எல்லா ஆண்களையும் அப்படிச் சொல்லவில்லை. மற்ற உறுப்பினர்களெல்லாம் கொதிக்க வேண்டாம். எதற்காகக் கொதிக்க வேண்டும்? அப்படிச் செய்தால்தானே கஷ்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்து பேசுங்கள். யாரும் கொதிக்கவில்லை. எல்லோரும் smooth ஆகத்தான் இருக்கிறார்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்லைன் வாயிலாகப் பொருட்கள் வாங்கப்படும் market நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகச் சிறப்பாகச் செயல்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதி காக்கவும்.

திருமதி வானதி சீனிவாசன்: இதில் GeM portal–ஐப்பற்றி மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 2016 ஆம் ஆண்டு மத்திய வர்த்தகத் துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் அனைத்தும் மின்னணு வாயிலாகத்தான் பொருட்களை வாங்க வேண்டுமென்ற பிரதமர் மோடி அவர்களுடைய ஏற்பாட்டின் காரணமாக, கடந்த வருடம் மட்டும் கிட்டத்தட்ட ரூ.1 இலட்சம் கோடி அளவிற்கு order value, GeM portal–ல் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: நான் விஷயத்தைச் சொல்கிறேன். எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிய வேண்டுமென்பதற்காக இந்தத் தகவலைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

2022 ஏப்ரல் 28]

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்தப் பதில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. முதல் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: நான் கேள்வியைத்தான் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் கொடுத்துள்ள பதில், generic பதிலாக இருக்கிறது. முன்னணி நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தால்—ஏற்கெனவே மத்திய அமைச்சகம் Flipkart நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து 2019 ஆம் ஆண்டில் GeM portal–லில் பெண் தொழில்முனைவோர்கள் சுய உதவிக் குழுக்களுடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Parliament–ல் கேட்கக்கூடிய கேள்வியை Assembly–ல் கேட்கிறீர்களே! தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்கள்மூலம் உற்பத்தி செய்கிற பொருட்களை விற்பனை செய்வதற்கு நீங்கள் என்ன ஆலோசனை சொல்கிறீர்கள்? அந்த விஷயத்திற்கு வாருங்கள். கேள்வியைக் கேளுங்கள். உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. தயவுசெய்து கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பதிலில் தனியாக இதற்கென்று திட்டம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், எந்த முன்னணி நிறுவனத்துடன் நம்முடைய அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கேளுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: வெறும் 69 பொருட்களை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இங்கே ஆயிரக்கணக்கான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[*2022 ஏப்ரல் 28*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு கொண்டுவந்த* GeM *திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்று இன்னும் ஓராண்டுகூட நிறைவடையவில்லை. ஆகவே, இடைப்பட்ட இந்த ஓராண்டு காலத்திற்குள் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலமாக ஏற்கெனவே மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்ட* www.moneybazar.com *என்ற இணையதளத்தைப் புதுப்பித்து, தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு அதனை வடிவமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைப்போலவே மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், அரசு அலுவலகங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் விற்பனை செய்யும்பொருட்டு ஒன்றிய அரசின்* GeM *இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும், விருப்பமுள்ள சுய உதவிக் குழுக்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை முன்னணி தனியார் மின்னணு வர்த்தக இணையதளத்தின் வாயிலாக விற்பனை செய்திட ஏதுவாக, இந்நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சிகள் வழங்கப்பட்டு, தேவையான அனைத்து உதவிகளையும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செய்து வருகிறது. இதுவரை 116 சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள்,* Amazon, Flipkart-*ல் விற்பனை செய்யும்பொருட்டு* GeM *இணையதளத்தின் வாயிலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதையும், தொடர்ந்து இந்த மின்னணு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகள் இந்தக் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்னணு வாயிலாக நாம் பொருட்களை வாங்குகின்றபோது, சாதாரண பெண்மணிகளுக்குக்கூட, தங்கள் அமைச்சகத்திற்கு அல்லது முக்கியமான துறைகளுக்குத் தாங்கள்*

2022 ஏப்ரல் 28]

எந்தவித இடைத்தரகரும் இன்றி பொருட்களை நேரடியாக விற்பனை செய்ய முடியும் என்கின்ற மிகப் பெரிய நம்பிக்கையை இந்த online வர்த்தகம் என்பது ஏற்படுத்தும். நான் இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை வைக்கிறேன், இங்கிருக்கக்கூடிய அமைச்சகங்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அலுவலகத்திலும்கூட, பயன்படுத்தக்கூடிய பொதுப் பயன்பாட்டுப் பொருட்களை இதுபோன்ற சுய உதவிக் குழுக்களிடமிருந்து online மூலமாக வாங்கினால் மற்றவர்களுக்கு அது பெரிய உத்வேகத்தைக் கொடுக்கும். அமைச்சகங்களும் குறிப்பிட்ட சதவிகித பொருட்களை இதன்மூலம் வாங்க வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவையும் அரசு எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சென்று விடாதீர்கள், இருங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு மகளிர் முன்னேற்றத்திற்கு, மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்கள் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு 1989 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில், மறைந்த நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான், இந்தத் திட்டம் துவக்கப்பட்டது. அதுவரை மகளிர் முன்னேற்றத்தில் காட்டிய அக்கறையைவிட, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள் கூடுதல் அக்கறையைக் காட்டினார்கள். பிறகு, படிப்படியாக அது வளர்ச்சி பெற்று, 2006–2011 ஆம் ஆண்டுகளில் மீண்டும் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், நம்முடைய இன்றைய முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சராகவும், இந்தத் துறையின் அமைச்சராகவும் இருந்து பல்வேறு திட்டங்களைத் தீட்டி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏராளமாக, தாராளமாக நிதி உதவி, சுழல் நிதி, வங்கிக் கடன் போன்றவை கிடைப்பதற்கு வழிவகை செய்து, மகளிர் முன்னேற்றத்தில் அக்கரைக்கொண்டு அவர்களின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்த காலம், பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆக, இடைப்பட்ட 10 ஆண்டு காலத்தில் இருந்த தேக்க நிலையைப்*

போக்கி, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்று மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையில்தான், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான நிதி உதவிகளை, சென்ற ஆண்டுகூட, 20,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் போன்றவற்றை இலக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உருவாக்கித் தந்தார்கள். ஆனால், அந்த இலக்கையும் தாண்டி, 21,350 கோடி ரூபாய் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் போன்றவை வழங்கப்பட்டன. மேலும் இந்த ஆண்டு 25,000 கோடி ரூபாய் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் போன்ற உதவிகள் செய்வதற்கு எங்களுக்கு இலக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றி, நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்கிறதோ, அப்போதெல்லாம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வளர்ச்சி பெற்று பொருளாதார நிலை மேம்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள கருத்துகள் ஏற்கெனவே அரசின் செயல் திட்டத்தில் இருக்கின்றன. அரசு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் பயன்பாட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்க வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இனிவருங்காலங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

195—

கடல்சார் மீன்வளக் கல்லூரி

***14300—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—